ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

| | |
|---|---|
| කර්ණාටක සංගීතය | I, II |
| கர்நாடக சங்கீதம் | I, II |
| Carnatic Music | I, II |

**11.12.2018 / 0830 - 1140**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## கர்நாடக சங்கீதம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை** (×) **இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. தகதிமி - என்ற ஜதிச்சொல் குறிப்பது
   (1) திஸ்ரநடை (2) கண்டநடை (3) சதுஸ்ரநடை (4) மிஸ்ரநடை

2. பண்டைய காலத்தில் 'இராக கதம்பம்' என அழைக்கப்பட்ட உருப்படி
   (1) கொத்துக் கீர்த்தனை (2) கிருதி
   (3) இலட்சண கீதம் (4) இராகமாலிகை

3. வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வில்லில் 'விற்கடம்' கட்டப்பட்டிருப்பது
   (1) வில்லின் வலப்பகுதியில் (2) வில்லின் இடப்பகுதியில்
   (3) வில்லின் நடுப்பகுதியில் (4) வில்லின் முற்பகுதியில்

4. ரூபகதாள அங்க அடையாளத்தின் முன் ஒரு லகுவைச் சேர்த்தால் வருவது
   (1) ஜம்பைதாளம் (2) மட்டியதாளம் (3) திரிபுடைத்தாளம் (4) துருவதாளம்

5.  இவ் இசைக்குறியீடு குறிப்பது
   (1) கமகம் (2) ஏற்றஜாரு (3) அன்னியஸ்வரம் (4) இறக்கஜாரு

6. 'அள்ளியுண்டிடலாம்...' என்ற பந்துவராளி இராகக் கீர்த்தனையின் பல்லவி ஆரம்பிக்கும் தாளத்தின் எடுப்பு
   (1) சமம் (2) அதீதம் (3) அனாகதம் (4) ஆகதம்

7. புல்லாங்குழல் ஒரு
   (1) தோற்கருவி (2) நரம்புக்கருவி (3) துளைக்கருவி (4) கஞ்சக்கருவி

8. 'அதில் வரும் ஸ்வரங்கள் ஔடவமேயாம்' என்ற சாஹித்திய வரிகளைக் கொண்ட இலட்சண கீதம் அமைந்த இராகம்
   (1) ரேவதி (2) பிலஹரி (3) ஆரபி (4) மோகனம்

[பக். 2 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

9. பதம் என்ற உருப்படியைப் பாடும்போது வெளிப்படும் ரஸம்
(1) கருணை (2) வீரம் (3) சிருங்காரம் (4) சாந்தம்

10. பின்வருவனவற்றுள் சபாகான உருப்படிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
(1) கீதம், வர்ணம்
(2) வர்ணம், ஜதிஸ்வரம்
(3) இலட்சண கீதம், பதம்
(4) கீர்த்தனை, தில்லானா

11. வயலின் வாத்தியத்தின் தந்திதாங்கி, விரற்பலகை, பிருடைகள் ஆகிய பாகங்களை செய்யப் பயன்படும் மரம்
(1) பைன் (2) மேப்பிள் (3) கருங்காலி (4) சிகமூர்

12. திருப்பல்லாண்டினை அருளியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) மாணிக்கவாசகர்
(3) சேந்தனார் (4) அருணகிரிநாதர்

13. 72 - மேளகர்த்தா இராகங்களுள் 01 - 36 வரையுள்ள மேளகர்த்தாக்களுக்கு வழங்கப்படும் பெயர்
(1) பூர்வ மேளகர்த்தாக்கள்
(2) உத்தர மேளகர்த்தாக்கள்
(3) பூர்வ உத்தர மேளகர்த்தாக்கள்
(4) பிரதிமத்திம மேளகர்த்தாக்கள்

14. பின்வருவனவற்றுள் பழம்பஞ்சுரம் பண்ணில் அமைந்த தேவாரம்
(1) "பண்ணும் பதமேழும்....."
(2) "மானினேர்விழி....."
(3) "பண்டு நால்வருக்கு....."
(4) "உற்றுமை சேர்வது....."

15. கனபஞ்சக இராகங்களில் ஒன்று
(1) மத்யமாவதி (2) ஆரபி (3) ஹம்ஸத்வனி (4) பிலஹரி

16. மகாரீ | மாகரீ | ஸா | ஸா || என்று முடிவடையும் அலங்காரத்தின் மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை
(1) 08 (2) 10 (3) 14 (4) 15

17. பின்வருவனவற்றுள் தாள சந்தத்துடன் பாடப்படுவது
(1) திருப்புராணம் (2) வெண்பா (3) திருப்புகழ் (4) திருவாசகம்

18. பின்வரும் வாத்தியங்களுள் மங்கள இசையை உண்டாக்கும் வாத்தியம்
(1) ஹார்மோனியம் (2) தம்புரா
(3) புல்லாங்குழல் (4) நாதஸ்வரம்

19. இசைக்காற்றிய பணிகளுக்காக பல்லவ அரசன் மகேந்திரவர்மன் பெற்ற விருதுகள்
(1) விசித்ரசித்த, பாரதரத்னா
(2) விசித்ரசித்த, சங்கீர்ண
(3) பத்மபூஷண், சங்கீர்ண
(4) பத்மபூஷண், பத்மஸ்ரீ

20. 72 - மேளகர்த்தா சக்கரத்தில் ஆதித்ய சக்கரம் எடுத்துக்கொள்ளும் மேள எண்கள்
(1) 49 - 54 (2) 55 - 60 (3) 61 - 66 (4) 67 - 72

21. ஆலயத்தில் சுவாமி உலா வரும்போது மல்லாரி இசையை இசைக்கப் பயன்படும் வாத்தியங்கள்
(1) மிருதங்கம், நாதஸ்வரம் (2) புல்லாங்குழல், தவில்
(3) நாதஸ்வரம், வயலின் (4) நாதஸ்வரம், தவில்

[பக். 3 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

**22.** சாமகானம் பாடப்படும் இராகம்
(1) கரஹரப்ரியா (2) ஹரிகாம்போஜி (3) மோகனம் (4) தோடி

**23.** அப்பியாசகானம், சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி
(1) வர்ணம் (2) கீதம் (3) தேவாரம் (4) தில்லானா

**24.** பின்வரும் வாத்தியத் தொகுதிகளைக் கருதுக.
A - பியானோ, கிற்றார்
B - ஸித்தார், தபேலா
C - கீ போட், சக்ஸபோன்
D - ஸரோட், ஸாரங்கி
மேற்கூறப்பட்டவற்றுள் ஹிந்துஸ்தானி வாத்தியங்களைக் குறிப்பது
(1) Aயும் Cயும் (2) Aயும் Dயும் (3) Bயும் Cயும் (4) Bயும் Dயும்

**25.** பண்ணிசையில் ஷாடவ இராகத்தைக் குறிக்கும் பெயர்
(1) பண் (2) பண்ணியம்
(3) திறம் (4) திறத்திறம்

**26.** 72 - மேள இராகமாலிகையை இயற்றியவர்
(1) மகா வைத்தியநாதய்யர்
(2) முத்துஸ்வாமி தீட்சிதர்
(3) சுப்பராம தீட்சிதர்
(4) அருணாசல கவிராயர்

**27.** பக்தி இலக்கியங்களினூடாக பக்தி இசையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதி
(1) 5 ஆம் 6 ஆம் நூற்றாண்டு (2) 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டு
(3) 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டு (4) 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டு

**28.** வர்ணத்தின் பூர்வாங்கம், உத்தராங்கம் என்பவற்றுள் அடங்கும் அங்கங்கள்
(1) பூர்வாங்கம் - பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்
உத்தராங்கம் - சரணம், சரணஸ்வரங்கள்
(2) பூர்வாங்கம் - பல்லவி, முத்தாயிஸ்வரம், அனுபல்லவி
உத்தராங்கம் - சரணம், சிட்டைஸ்வரம்
(3) பூர்வாங்கம் - பல்லவி, சரணம், முத்தாயிஸ்வரம்
உத்தராங்கம் - அனுபல்லவி, சரணஸ்வரங்கள்
(4) பூர்வாங்கம் - பல்லவி, அனுபல்லவி, சிட்டைஸ்வரம்
உத்தராங்கம் - சரணம், முத்தாயிஸ்வரம்,

**29.** சங்கதிகளும், கடினமான வக்ரப் பிரயோகங்களும் **இல்லாத** உருப்படி
(1) கீர்த்தனை (2) சஞ்சாரி கீதம்
(3) வர்ணம் (4) ஸ்வரஜதி

**30.** நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவி பாடப்பட்ட பதிகம்
(1) திருவெம்பாவை (2) திருவம்மானை
(3) திருநேரிசை (4) திருவாசகம்

**31.** சாஸ்திரங்களின் மூலம் தான் கற்ற கமகங்கள், நுட்பங்களைப் பாடிக்காட்டி சீர்ப்படுத்தியவர்
(1) க்ஷேத்ரக்ஞர் (2) சியாமாசாஸ்திரிகள்
(3) கனம் கிருஷ்ணய்யர் (4) பச்சிமிரியம் ஆதியப்பய்யர்

**32.** சதுஸ்ரஜாதி துருவதாளத்தின் அட்சர எண்ணிக்கையைக் கொண்ட தாளம்
(1) சதுஸ்ரஜாதி மட்டியதாளம் (2) சங்கீரணஜாதி ரூபகதாளம்
(3) கண்டஜாதி அடதாளம் (4) கண்டஜாதி ஜம்பைதாளம்

[பக். 4 ஐப் பார்க்க

**33.** பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்க.

- கதாபாத்திரங்கள்
- பொருத்தமான உடையலங்காரம்
- ஒப்பனை
- பாடலும், உரையும்
- பக்கவாத்தியங்கள்
- பின்னணி இசை

மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய செயற்பாடு
(1) சிறுவர் பாடல்களை ஆக்கம் செய்தல்
(2) ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்தல்
(3) வில்லுப்பாட்டினை ஆக்கம் செய்தல்
(4) இசைநாடகத்தினை ஆக்கம் செய்தல்

**34.** பஞ்சபுராணத்தில் திருப்பல்லாண்டிற்குப் பின்னர் பாடப்படுவது
(1) திருப்புகழ் (2) திருவிசைப்பா (3) திருப்புராணம் (4) திருவாசகம்

**35.** எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் அமைந்த உருப்படி
(1) பதவர்ணம் (2) தானவர்ணம்
(3) அடதாளவர்ணம் (4) நவராகமாலிகாவர்ணம்

**36.** 'சுந்தரர் சேவை கண்ட நன் சுகிர்தமே சுகிர்தம்' என்ற சரண வரிகளைக் கொண்ட கீர்த்தனை
(1) உள்ளம் இரங்கி (2) இனி நமக்கொரு
(3) அள்ளி உண்டிடலாம் (4) ஸ்ரீ ராஜராஜேஸ்வரி

**37.** 'ஸ்வரமேள கலாநிதி' என்ற சமஸ்கிருத கிரந்தத்தை இயற்றியவர்
(1) ராமாமாத்யர் (2) கோவிந்தாசாரியார்
(3) வெங்கடமகி (4) ஷேத்ரக்ஞர்

**38.** திவ்ய நாமக் கீர்த்தனைகள், உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள் ஆகியவற்றை இயற்றியவர்
(1) புரந்தரதாஸர் (2) வெங்கடரமண பாகவதர்
(3) தியாகராஜ சுவாமிகள் (4) சியாமா சாஸ்திரிகள்

**39.** துரித காலங்களை இலகுவில் வாசிக்கக்கூடிய தந்திவாத்தியம்
(1) தம்புரா (2) வயலின்
(3) வீணை (4) ஸித்தார்

**40.** ஆரோஹணத்திலோ அவரோஹணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்
(1) வர்ஜ இராகம் (2) வக்ர இராகம்
(3) பாஷாங்க இராகம் (4) உபாங்க இராகம்

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

**கவனிக்க :**

* **முதலாம்** வினாவையும் வேறு **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) 'சங்கீத பிதாமஹர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

(ii) பேரின்பப் பதங்கள் இயற்றப்பட்ட மொழி யாது?

(iii) 16 ஸ்வரப் பெயர்களில் ஷட்சுருதிரிஷபம் ஒலிக்கும் ஸ்வரஸ்தானம் யாது?

(iv) சியாமாசாஸ்திரிகளின் உருப்படிகளுக்கு ஒப்பான ரஸம் எது?

(v) மிருதங்கத்தின் இடந்தலைக்கு வழங்கப்படும் பெயர் யாது?

(vi) 'முருகா' என்ற மத்தியமாவதி இராக தானவர்ணத்தில் சரணத்தின் ஆரம்ப வரி யாது?

(vii) மிஸ்ரஜாதி அடதாளத்தின் அங்க அடையாளத்தினைத் தருக.

(viii) 'காபி' என அழைக்கப்படும் ஹிந்துஸ்தானி இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இராகம் யாது?

(ix) இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகள் எவை?

(x) வீணை வாத்தியத்தின் பாகங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

**2.** பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்.)

(i) கல்யாணி

(ii) ஆரபி

(iii) ஹரிகாம்போஜி

**3.** பின்வருவனவற்றுள் விரும்பிய **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கத்தைத் தருக.
(இயற்றியவர் பெயரையும், உதாரணங்களையும் தெரிவு செய்த விடயத்திற்கேற்ப குறிப்பிடல் வேண்டும்)

(i) காலப்பிரமாணம்

(ii) க்ரஹம்

(iii) பதவர்ணம்

**4.** (i) தவில் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் சிறப்புகள் **இரண்டினைத்** தருக.

(iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iv) இவ்வாத்தியத்தை வாசிக்கும் முறையினை விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

+94 71 800 8533 / +94 77 088 2228 WWW.PADANAMAPUBLICATION.LK

5. முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) வாழ்க்கைக் காலம்

(ii) பிறந்த இடம்

(iii) இளமைக் காலம்

(iv) இவர் இயற்றிய உருப்படிகள் **இரண்டு**

(v) இவர் ஆற்றிய அற்புதங்கள் **நான்கு**

(vi) இவரது **இரண்டு** சிஷ்யர்கள்

6. நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாள அங்க அடையாளங்களுடன் எழுதுக. (இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம், மேள எண், ஜன்னியராகமெனின் தாய் இராகத்தின் மேள எண், இயற்றியவர் பெயர் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்)

7. (i) சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகும் முறையினை விளக்குக.

(ii) சப்த தாளங்களில் துருவதாளம், ஜம்பைதாளம், ரூபகதாளம் என்பன ஜாதிபேதமடையும் முறையினை அட்டவணைப்படுத்துக.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசைவரலாற்றில் 14ஆம் 15ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසායි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **42**    විෂයය / பாடம்: **கர்நாடக சங்கீதம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 4 | 31. | 4 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 1 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 1 | 33. | 4 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 2 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 2 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

**வினா இலக்கம் 1 இற்கான குறிக்கோள்**
உருப்படிகள், வாக்கேயகாரர்கள், சப்ததாளங்கள், இராக இலட்சணம், இந்திய சங்கீதம், வாத்தியக் கருவிகள் போன்றவை பற்றிய அறிவினை வெளிப்படுத்துவார்.

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
   (i) 'சங்கீத பிதாமஹர்' என்று அழைக்கப்படுபவர் யார்?
   (ii) பேரின்பப் பதங்கள் இயற்றப்பட்ட மொழி யாது?
   (iii) 16 ஸ்வரப் பெயர்களில் ஷட்சுருதிரிஷபம் ஒலிக்கும் ஸ்வரஸ்தானம் யாது?
   (iv) சியாமாசாஸ்திரிகளின் உருப்படிகளுக்கு ஒப்பான ரஸம் எது?
   (v) மிருதங்கத்தின் இடந்தலைக்கு வழங்கப்படும் பெயர் யாது?
   (vi) 'முருகா' என்ற மத்தியமாவதி இராக தானவர்ணத்தில் சரணத்தின் ஆரம்ப வரி யாது?
   (vii) மிஸ்ரஜாதி அடதாளத்தின் அங்க அடையாளத்தினைத் தருக.
   (viii) 'காபி' என அழைக்கப்படும் ஹிந்துஸ்தானி இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இராகம் யாது?
   (ix) இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகள் எவை?
   (x) வீணை வாத்தியத்தின் பாகங்கள் இரண்டினைப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| i. | புரந்தரதாசர் | (01 புள்ளி) |
| ii. | தமிழ்மொழி | (01 புள்ளி) |
| iii. | சாதாரண காந்தாரம் | (01 புள்ளி) |
| iv. | கதலி ரஸம் | (01 புள்ளி) |
| v. | தொப்பி | (01 புள்ளி) |
| vi. | திருமால் அருமருகா | (01 புள்ளி) |
| vii. | $1_7 1_7 0 0$ | (01 புள்ளி) |
| viii. | கரஹரப்பிரியா | (01 புள்ளி) |
| ix. | கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் | (02 புள்ளி) |
| x. | வீணை வாத்தியத்தின் பாகங்கள் இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் | (02 புள்ளி) |

வீணை வாத்தியத்தின் பாகங்களாவன

| | | |
|---|---|---|
| 1. குடம் | 2. மேற்பலகை | 3. தண்டி |
| 4. சுரைக்காய் | 5. பிரடைகள் | 6. யாளி முகம் |
| 7. மேளச்சட்டம் | 8. மெழுகுச்சட்டம் | 9. 24 மெட்டுக்கள் |
| 10. குதிரைகள் - 02 | 11. லங்கர் | 12. நாகபாசம் |
| 13. உருட்டுக்கள் (சிறு வளையங்கள்) | | |

மொத்தப் புள்ளிகள் 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 1 + 2 + 2 = 12 புள்ளிகள்

**வினா 02 இற்கான குறிக்கோள்**

இராகத்தின் இலட்சணத்தை விபரித்து உருப்படிகள் சஞ்சாரங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.

**2.** பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்.)

(i) கல்யாணி

(ii) ஆரபி

(iii) ஹரிகாம்போஜி

i. கல்யாணி

65 ஆவது மேளகர்த்தா இராகம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆ : ஸரிகமபதநிஸ்
  அ : ஸ்நிதபமகரிஸ
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  பிரதி மத்திமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  காகலி நிஷாதம்
  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- எல்லா ஸ்வரங்களும் இராகச் சாயா ஸ்வரங்களாகும்.
  என எழுதியிருப்பின் (01 புள்ளிகள்)

- பிரசித்தி பெற்ற பிரதிமத்திம இராகமாகும்.

- சம்பூர்ண இராகம். அனேக ஜன்ய ராகங்களைக் கொண்ட இராகமாகும்.

- ஜண்டை ஸ்வரப்பிரயோகங்களும், தாட்டு ஸ்வரப்பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராக ரஞ்சகமானவை.

- எப்போதும் பாட உகந்த இராகம். எனினும் மாலை வேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும்.

- சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகமாகும்.

- சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகமாகும்.
- மூர்ச்சனாகாரக மேள இராகம்

  இதன் ரிஷப, காந்தார, பஞ்சம, தைவத, நிஷாத ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்ய முறையே ஹரிகாம்போஜி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா, தோடி போன்ற இராகங்கள் உண்டாகும்.
- முதன் முதலில் மனிதனுடைய பார்வைக்கு வந்த பிரதி மத்திம இராகமாகும்.

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் கொடுக்கப்பட்டிருப்பின் (03 புள்ளிகள்)

- உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | பதம் தருவாய் | - | ஆதி |
| வர்ணம் | - | வனஜாஷிரோ | - | ஆதி |
| கிருதி | - | நிதிசால | - | சாபு |
| | - | ஆடும் கலாபமயில் | - | ஆதி |
| | - | வாசுதேவயனி | - | ஆதி |
| பதம் | - | பாரெங்கும் | - | ஆதி |
| கிருதி | - | ஏதாவுனரா | - | ஆதி |
| | | ஹிமாத்ரிஸுதே | - | ரூபகம் |
| | | கமலாம்பஜரே | - | ஆதி |

இவ் இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- சஞ்சாரம்

  பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதியிருப்பின் (01 புள்ளி)

மொத்தப் புள்ளிகள் 1 + 2 + 2+1 + 3+ 2 + 1 = 12 புள்ளிகள்

ii. ஆரபி
- இது 29 ஆவது மேளமான சங்கராபரணத்தின் ஜன்யம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆ : ஸரிமபதஸ்

  அ : ஸ்நிதபமகரிஸ

  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்

  ஷட்ஜம்

  சதுஸ்ருதி ரிஷபம்

  அந்தர காந்தாரம்

  சுத்த மத்திமம்

  பஞ்சமம்

  சதுஸ்ருதி தைவதம்

  காகலி நிஷாதம்

  எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- இராகச்சாயா ஸ்வரங்கள் - ரிஷபம், மத்திமம், தைவதம்
  நியாச ஸ்வரங்கள் - ரிஷபம், பஞ்சமம்
  கம்பித ஸ்வரம் - ரிஷபம், தைவதம்
  இவற்றுள் 2 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளிகள்)

- வர்ஜராகம் ஆரோகணத்தில் மட்டும் காந்தாரம், நிஷாதம் வர்ஜம்
- ஔடவ சம்பூர்ணராகம் – உபாங்க ராகம்
- கனராகம் பிரசித்தி பெற்ற கனபஞ்சக ராகங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்த இராகத்தின் சாயலை மத்திமகாலம் அல்லது தானம் வாசிப்பதன் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலாம்.
- நிஷாதம், காந்தாரம் இவ் இராகத்தின் அல்ப ஸ்வரங்கள். நிஷாதம் இல்லாமலே சில உருப்படிகள் உள்ளன.
- காந்தாரம், ஒரு துர்பல ஸ்வரமாகும். இதனை தீர்க்கமாகவோ, அழுத்தமாகவோ ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது.
- மா, கரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சகப் பிரயோகம்
- உருப்படிகள் ரி, ப, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கும்.
- எப்பொழுதும் பாடலாம்.
- மங்களகரமான இராகம்.
- கச்சேரியின் ஆரம்பத்தில் பாடத் தகுதியான இராகம்.
- மூர்ச்சனாகாரக ஜன்ய ராகம்
  இதன் ரி, ம, ப ஸ்வரங்களை கிரஹபேதம் செய்ய முறையே ஆபேரி, மோகன கல்யாணி, கேதாரகௌளை இராகங்கள் உண்டாகும்.
- பண் : பழந்தக்க ராகம்
- ரௌத்திர ரஸம் பொருந்திய இராகம்

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்)

- உருப்படிகள்

| | | |
|---|---|---|
| கீதம் | வாரணமுகா | ஆதி |
| வர்ணம் | அன்னமே | ஆதி |
| பஞ்சரத்தினம் | ஸாதிஞ்சனே | ஆதி |
| கிருதி | ஸ்ரீ சரஸ்வதி | ரூபகம் |
| கிருதி | ஒருக்கால் சிவ | ஆதி |

  ஆரபி இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- சஞ்சாரம்
  பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருப்பின் (01 புள்ளி)

மொத்தப் புள்ளிகள் 1 + 2 + 2+ 1 + 3+ 2+ 1 = 12 புள்ளிகள்

iii. ஹரிகாம்போதி

- இது 28 ஆவது மேளகர்த்தா இராகம் எனக் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளி)

- ஆ : ஸரிகம பதநிஸ்
  அ : ஸ்நிதப மகரிஸ
  எனக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- ஸ்வரஸ்தானங்கள்
  ஸட்ஜம்
  சதுஸ்ருதி ரிஷபம்
  அந்தர காந்தாரம்
  சுத்த மத்திமம்
  பஞ்சமம்
  சதுஸ்ருதி தைவதம்
  கைசிகி நிஷாதம் என்க் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- இராகச்சாயா ஸ்வரங்கள் - க, ம, நி
  நியாச ஸ்வரங்கள் - க, ம, நி
  அம்ச ஸ்வரங்கள் - க, ம, நி
  கம்பித ஸ்வரங்கள் - ரி, ம, நி
  இவற்றுள் எவையேனும் 2 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (01 புள்ளிகள்)

- சம்பூர்ண இராகம் ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி இராகம்
- உருப்படிகள் ப, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.
- எப்பொழுதும் பாடலாம். பல ஜன்ய ராகங்களைக் கொண்ட ஜனக இராகமாகும்.
- திருத்தாண்டகம் பாடப்படும் இராகம்.
- பண்ணிசையில் செம்பாலைப்பண்ணும், குறிஞ்சிப் பண்ணும் இவ் இராகத்தைக் குறிக்கின்றது.
- ஹிந்துஸ்தானி இசையில் "கமாஜ் தாட்" என அழைக்கப்படுகின்றது.
- பிரத்தியாகத கமகம் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றது.
- பண்டைத் தமிழிசையில் சுத்த மேளம் எனப்படும் இராகம் இதுவாகும்.
- மூர்ச்சனாகாரக மேள இராகம் இதன் ரி ம ப த நி ஸ்வரங்களை கிரகபேதம் செய்ய முறையே நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா, தோடி, கல்யாணி போன்ற மேளங்கள் ஒலிக்கும்.

  இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (03 புள்ளிகள்)

- உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | வாசரவணனே | - | ஆதி |
| கிருதி | - | ராமநின்னு | - | ரூபகம் |
| | - | ஒகமாட | - | ரூபகம் |
| | - | பாமாலைக்கிணை | - | ஆதி |
| | - | பார்க்கப் பார்க்க | - | மிஸ்ர சாபு |
| கீர்த்தனை | - | எங்கே தேடுகிறாய் | - | ஆதி |

  ஹறிகாம்போதி இராகத்தில் எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)

- சஞ்சாரம்
  பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருப்பின் (01 புள்ளி)

மொத்தப் புள்ளிகள் 1 + 2 + 2+ 1 + 3+ 2+ 1 = 12 புள்ளிகள்

**வினா 3 இற்கான குறிக்கோள்**
தரப்பட்டுள்ள விடயங்களான காலப்பிரமாணம், க்ரஹம், பதவர்ணம் என்பவற்றுள் விரும்பிய இரண்டினைத் தெரிவு செய்து விரிவான விளக்கத்தினை அளிப்பார்.

தெரிவு செய்த விடயங்களுக்கேற்ப, இயற்றியவர் பெயரையும், உதாரணங்களையும் குறிப்பிடுவார்.

**3.** பின்வருவனவற்றுள் விரும்பிய **இரண்டினைப்** பற்றி விரிவான விளக்கத்தைத் தருக.
(இயற்றியவர் பெயரையும், உதாரணங்களையும் தெரிவு செய்த விடயத்திற்கேற்ப குறிப்பிடல் வேண்டும்)
(i) காலப்பிரமாணம்
(ii) க்ரஹம்
(iii) பதவர்ணம்

i. **காலப்பிரமாணம்**
இசை உலகில், ஸ்வரங்களின் கால அளவைக் காட்டுவதற்குக் குறியீடுகள் உபயோகப்படுகின்றன. ஒரு அட்சரகாலமுடையவை குறில் ( ஹ்ரஸ்வ ) ஸ்வரங்கள் என்றும் இரண்டு அட்சரகாலமுடையவை நெடில் (தீர்க்க) ஸ்வரங்கள் எனவும் அழைக்கப்படும்.

குறில் ஸ்வரம் - ஸ - 1 அட்சரகாலம்
நெடில் ஸ்வரம் - ஸா - 2 அட்சரகாலம்
இவ் விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

கார்வைகளின் காலப்பிரமாணம்
, - 1 அட்சரகாலம்
; - 2 அட்சரகாலம்
1. ஸ, - 2 அட்சரகாலம்
2. ஸா, - 3 அட்சரகாலம்
3. ஸா; - 4 அட்சரகாலம்
4. ஸா; , - 5 அட்சரகாலம்
5. ஸா; ; - 6 அட்சரகாலம்

இவ்விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

ஒரு ஸ்வரத்தின் மேல் ஒரு படுக்கைக் கோடு போட்டிருப்பின் அந்த ஸ்வரத்தின் அட்சரகாலம் 1 / 2 ஆகும். இரண்டு படுக்கைக் கோடுகள் போடப்பட்டிருப்பின், அதன் அட்சரகாலம் 1 / 4 ஆகும்.
உதாரணம் : ஸ - 1 அட்சரகாலம்
$\overline{\text{ஸ}}$ - 1/2 அட்சரகாலம்
$\overline{\overline{\text{ஸ}}}$ - 1/4 அட்சரகாலம்

முதலாம் காலம் - ஸரிகம / பத / நிஸ் //

இரண்டாம் காலம் - $\overline{\text{ஸரிகமபதநிஸ்}}$ / $\overline{\text{ஸ்நிதப}}$ / $\overline{\text{மகரிஸ}}$ //

மூன்றாம் காலம் - $\overline{\overline{\text{ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ}}}$ / $\overline{\overline{\text{ஸரிகமபதநிஸ்}}}$ / $\overline{\overline{\text{ஸ்நிதபமகரிஸ}}}$ //
இவ்விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

(2 + 2 + 2 = 06 )

ii. **க்ரஹம்**


தாளத்தில் பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு கிரஹம் அல்லது எடுப்பு என்று பெயர் எடுப்பு மூன்று வகைக்கப்படும்.

1. சம எடுப்பு (ஸம க்ரஹம்)
2. அனாகத எடுப்பு (அனாகத க்ரஹம்)
3. அதீத எடுப்பு (அதீத க்ரஹம்)

**சம க்ரஹம்**

தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல் சம எடுப்பு எனப்படும்.


உதாரணம் : "மயில்வாகனா" - மோஹனம் - ஆதி
"ஆடுங்கலாபமயில்" - கல்யாணி - ஆதி




**அனாகத க்ரஹம்**

தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பித்தல், அனாகத எடுப்பு எனப்படும்.


உதாரணம் :
"நின்னருள் இயம்பாலாகுமோ" - பந்துவராளி - ரூபகம்
"உன்னையல்லால்" - சிம்ஹேந்திர மத்திமம் - ஆதி




**அதீத க்ரஹம்**

தாளம் தொடங்குமுன் பாட்டு ஆரம்பித்தல் அதாவது முன்னைய ஆவர்த்தனத்தின் இறுதியில் பாட்டு ஆரம்பித்தல் அதீத எடுப்பு எனப்படும்.

உதாரணம் : "சிவகாம சுந்தரி" - முகாரி - ஆதி




 தாளம்

 பாட்டு

- இவ் எடுப்பு, இசை உருப்படிகளில் மிக அபூர்வமாகவே கையாளப்படுகின்றது.
- ஹிந்துஸ்தானி இசையில் க்ரஹவேறுபாடுகள் இல்லை என்பதனால் உருப்படிகள் யாவும் சமகாலத்திலேயே ஆரம்பிக்கும்.
- மேலைத்தேய இசையில் சமம், அதீதம், அனாகதம் முறையே on the beat, Before the beat, after the beat எனப்படும்.

க்ரஹம் பற்றிய விளக்கம் - 1 1/2 புள்ளி
3 பிரிவுகளுக்கும் 1 1/2 புள்ளிகள் வீதம் - 4 1/2 புள்ளிகள்

மொத்தம் 1 1/2 + 4 1/2 = 6 புள்ளிகள்

iii. **பதவர்ணம்**

வர்ணத்தின் இரண்டு வகைகளுள் இதுவும் ஒன்றாகும்.

- பதவர்ணம் நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி வகையாகும்.
- இவை சௌககாலத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.
- அபூர்வமாக மத்திம காலத்திலும் சில பதவர்ணங்கள் உண்டு.

  உதாரணம் : மனவிசேகொனராதா - சங்கராபரணம் - ஆதி
- இதன் எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் அமைந்திருக்கும்.
- இவ்வர்ணத்தின் தாது ஆடுவதற்கு ஏற்றதாகவும், மாது அபிநயத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கும்.
- இவை பெரும்பாலும், ஆதி ரூபக தாளத்தில் அமைந்திருக்கும்.
- இவ்வர்ணத்தை சௌக வர்ணம், ஆடவர்ணம் என்றும் அழைப்பர்.
- ஜதிகள் உள்ள பதவர்ணங்களைப் பதஜதி வர்ணங்கள் என்று அழைப்பர்.

இவ்விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் (4 புள்ளிகள்)

- பதவர்ணங்களை இயற்றிய மகான்கள்

  இராமஸ்வாமி தீட்சிதர், முத்துஸ்வாமி தீட்சிதர், பல்லவி சேஷய்யர், தஞ்சாவூர் வடிவேல் நட்டுவனார், இராமசாமி சிவன்

  பதவர்ணம் இயற்றிய ஒருவரைக் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)

- பதவர்ணம் உதாரணம்
  1. ஸ்வாமி - நாட்டைக் குறிஞ்சி - ஆதி
  2. ஏமகுவ - தன்யாசி - ஆதி

பதவர்ணத்திற்கு 1 உதாரணம் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)

(4 + 1 + 1 = 6 புள்ளிகள்)

இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 6 + 6= 12 புள்ளிகள்

**வினா 4 இற்கான குறிக்கோள்**

- தவில் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிட்டு, வாத்தியத்தின் சிறப்பு, அமைப்பு, வாசிக்கும் முறை என்பவற்றை விளக்குவார்.

**4.** (i) தவில் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ii) இவ்வாத்தியத்தின் சிறப்புகள் **இரண்டினைத்** தருக.

(iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(iv) இவ்வாத்தியத்தை வாசிக்கும் முறையினை விளக்குக.




தவிலின் படம் வரைந்து பாகங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருப்பின்

படம் - (02 புள்ளிகள்)

பாகங்கள் - (02 புள்ளிகள்) (04 புள்ளிகள்)

ii. **சிறப்புகள்**

- நாதஸ்வரத்திற்குத் தாள வாத்தியமாக வாசிக்கப்படுகின்றது.
- மங்கள இசையில் முக்கிய கருவியாக விளங்குகின்றது.
- சுப காரியங்கள் மற்றும் திருவிழாக்களில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது.
- ஒரு பக்கம் கழியினாலும், மறுபக்கம் விரல்களினாலும் வாசிக்கப்படுகின்ற அதத விதத வாத்தியமாக விளங்குகின்றது.
- இராஜ வாத்தியமாக விளங்குகின்றது.
- மங்கள நிகழ்வான தாலி கட்டுதல், கங்கணம் கட்டுதல் போன்ற நிகழ்வுகளில் உரத்த இசையில் (கெட்டி மேளம்) வாசிக்கப்படுகின்றது.
- தொன்மை வாய்ந்த தோற் கருவியாக விளங்குகின்றது.

இவைபோன்ற சிறப்புகள் இரண்டினைக் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

iii. **வாத்தியத்தின் அமைப்பு**

- தவிலானது பலாமரத்தின் உருளை வடிவமான குற்றியின் உட்புறத்தைக் குடைந்தெடுத்து, பின்னர் அதன் இரு புறமும் தோலால் மூடப்பட்டு உருவாக்கப்படும்..
- இவை வலந்தலை, இடந்தலை என அழைக்கப்படுகின்றன. வலந்தலை இரண்டு தோல்களாலும் இடந்தலை ஒரு தோலாலும் மூடப்பட்டிருக்கும்.
- இத்தோல்கள் ஆட்டுத்தோலால் ஆனவை. தவில் வார்கள் எருமைத் தோலால் செய்யப்பட்டு இறுக்கிக் கட்டப்பட்டிருக்கும்.
- மூங்கில் வளையங்கள் தவிலின் இரு புறங்களிலும் பொருத்தப்படும். ஒலி எழுப்பும் தோற் பகுதிகள் அவ்வளையங்களில் இணைத்துச் சுற்றப்பட்டிருக்கும்.
- வலது கை விரல்களால் வாசிக்கப்படும் அகன்ற தோற் பகுதிக்கு வலந்தலை என்று பெயர். அதே போன்று இடது கையில் குச்சியால் (கழி) அடித்து வாசிக்கப்படும் பகுதிக்கு இடந்தலை என்று பெயர்.
- இது தொப்பி எனவும் அழைக்கப்படுகின்றது.
- இவ்விரு தோற் பகுதிகளிலும் வார்கள் நுழைவதற்கு ஏற்றவாறு 11 துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துளைகள் கண்கள் என அழைக்கப்படுகின்றது. இவற்றினிடையே வார்க்கற்றைகள் நுழைக்கப்பட்டு வளையங்களுடன் இறுக்கிக் கட்டப்படுகின்றது.
- தற்காலத்தில் தோல் வார்களுக்குப் பதிலாக உலோக வார்கள் பயன்படுத்தப்படுகின்றன. தவில் வாத்தியத்தைக் கட்டியுள்ள நாடாவை இணைக்கும் வளையத்தின் பெயர் "வெண்டயம்" ஆகும். இது பஞ்ச உலோகங்களினால் ஆனது.
- தவில் பெரும்பாலும் தஞ்சை நாச்சிமார் கோவிலடியில் செய்யப்பட்டு வருகின்றது.
- தவில் கழி திருவாச்சி மரக்கொம்பினால் செய்யப்படுகின்றது. இது 12 அங்குலம் நீளமுடையது.

மேற்குறிப்பிட்ட விடயங்களுள் 8 விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் (04 புள்ளிகள்)

iv.
- இது இடந்தலையில் கழி எனப்படுகின்ற சிறு கோலினாலும், வலந்தலையில் கூடுகள் அணிந்த விரல்களாலும் வாசிக்கப்படுகின்றது.
- இடது கையில் கழி இருந்த போதிலும் மணிக்கட்டு வரையும் உபயோகித்து வாசிக்கப்படுகின்றது.
- லய விந்நியாசம் செய்யும் போது இரசனை ஊட்டுவதற்காக வலந்தலையில் கழியினாலும் கையினாலும் ஒருவித ரஞ்சகமான வாசிப்பு வாசிக்கப்படுகின்றது.
- தவில் சுருதி சேர்த்து வாசிக்க முடியாத வாத்தியம் எனினும், நாதஸ்வரத்தின் சுருதிக்குத் தக்கவாறு சுருதி அமைக்கப்பட்டு வாசிக்கப்படுகிறது.
- தவிலானது நாதஸ்வரம், ஒத்து, தாளம் போன்ற கருவிகளுடன் வாசிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 4 + 2 + 4 + 2 = 12 புள்ளிகள்

வினா 5 இற்கான குறிக்கோள்
முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும், இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்வார்.

5. முத்துஸ்வாமி தீட்சிதரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(i) வாழ்க்கைக் காலம்

(ii) பிறந்த இடம்

(iii) இளமைக் காலம்

(iv) இவர் இயற்றிய உருப்படிகள் **இரண்டு**

(v) இவர் ஆற்றிய அற்புதங்கள் **நான்கு**

(vi) இவரது **இரண்டு** சிஷ்யர்கள்

i. 1776 - 1835 (19 ஆம் நூற்றாண்டு) (01 புள்ளி)

ii. திருவாரூர் வைத்தீஸ்வரன் கோவில் (01 புள்ளி)

iii.

- இவர் இளமையிலேயே சமஸ்கிருதம், தெலுங்கு, பாட்டு, வீணை, காவியம், நாடகம், அலங்காரம், மாந்திரீகம் ஆகியவற்றைக் கற்றார்.
- தன் தந்தையிடம் இசை இலக்கண சாத்திரத்தை நுண்மையாகக் கற்றுத் தேர்ந்தார்.
- இச்சமயத்தில் காசியிலிருந்து வந்த சிதம்பரநாத யோகி என்னும் பெரியாருடன் காசிக்குச் சென்று அங்கு அவருடன் 5 வருடங்கள் தங்கி இந்துஸ்தானி சங்கீதத்தைக் கற்றார்.

இவற்றுள் 2 விடயங்கள் எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)

iv. ஸ்ரீநாதாதி - மாயாமாளவகௌளை
ஆனந்தாம்ருதஹர்ஷினி - அமிர்தவர்ஷினி
கஞ்சதளாயதாட்சி - கமலமனோஹரி
அட்ஷயலிங்க - சங்கராபரணம்
தொகுதிக் கிருதிகள்
பஞ்சலிங்க ஸ்தலக் கிருதிகள்
நவக்கிரகக் கீர்த்தனைகள்
கமலாம்பா நவாவர்ணம்
அபயாம்பா நவாவர்ணம்
சிவ நவாவர்ணம்
மணிப்பிரவாளக் கீர்த்தனைகள்

இவற்றுள் 2 இனை எழுதியிருப்பின் (02 புள்ளிகள்)

v. - காசியில் கங்கை நதியின் நீரில் இறங்கி மந்திரம் உபதேசித்து வீணையைப பெற்றார்.

- வறுமையுற்ற போது எதுகுலகாம்போதி இராகத்தில் ஒரு உருப்படியைப் பாடி இரண்டு வண்டி நிறைய உணவுப் பொருட்களைத் தஞ்சை மன்னரிடமிருந்து பெற்றார்.
- கோவிலூர் இறைவனைத் தரிசிக்கச் சென்ற போது பூசாரி கதவை மூடிச் சென்று விட்டார். அப்பொழுது "அக்ஷயலிங்க" என்ற சாபு தாளத்தில் அமைந்த சங்கராபரண இராகக் கிருதியைப் பாடிட கதவு திறந்ததால் இறைவன் தரிசனம் பெற்றார்.
- சுத்தமத்தளம் தம்பியப்பா என்பவருக்கு வயிற்றுவலி நீங்க இவர் கிரகங்களைத் துதித்துப் பாடல் இயற்றினார். அதனைத் தஞ்சைப் பெரிய கோயிலில் பாடிட தம்பியப்பா வலி நீங்கப் பெற்றார்.
- எட்டயபுரம் செல்லும் வழியில் குடிப்பதற்கு நீர் கிடைக்காத அளவிற்கு வரட்சி ஏற்பட்டிருப்பதை அறிந்து அமிர்தவர்ஷினி இராகத்தில் "ஆனந்தாமிர்தவஹர்ஷினி" என்ற கிருதியைப் பாடி மழையைப் பொழிவித்தார்.

இவற்றுள் 4 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (04 புள்ளிகள்)

vi. - சின்னஸ்வாமி தீட்சிதர்

- பாலுஸ்வாமி தீட்சிதர்
- தஞ்சை நால்வர்களாகிய பொன்னையா, சின்னையா, சிவானந்தம் வடிவேலு
- வீணை வெங்கட்ராமையர்

இவர்களில் இருவர் பெயர் குறிப்பிட்டிருப்பின் (02 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் $1 + 1 + 2 + 2 + 4 + 2 = 12$ புள்ளிகள்

**வினா 6 இற்கான குறிக்கோள்**

கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாள அங்க அடையாளங்களுடன் எழுதுவார்.

**6.** நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வரதாள அங்க அடையாளங்களுடன் எழுதுக. (இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம், மேள எண், ஜன்னியராகமெனின் தாய் இராகத்தின் மேள எண், இயற்றியவர் பெயர் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்)

- வர்ணத்தின் இராகம், தாளம் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)
- ஆரோஹணம், அவரோகணம், மேளஎண் குறிப்பிடப்பட்டிருப்பின் (02 புள்ளிகள்)
- இசைக்குறியீடுகளுடன் ஸ்வரப்பகுதியை எழுதியிருப்பின் (04 புள்ளிகள்)

ஸ்வரப்பகுதிகளுக்கு ஏற்ப சாகித்தியம் எழுதப்பட்டிருப்பின் (04 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்

**தான வர்ணம்**

இராகம்:- மத்தியமாவதி
தாளம்:- ஆதி

ஆரோகணம் - ஸரிமபநிஸ்
அவரோகணம் - ஸ்நிபமரிஸ } 22ன் ஜன்யம்

**பல்லவி**

ரீஸாரீ; ரிமபம - ரிஸரீ / ரிமபம - ரிமரிஸ / ஸநிபநி - ஸரிஸரி ||
முருகா . . . . எ .ன தா. . . ரு. . . யி. . . ரே . . .
ரிமபமரிஸ ரிமரிமபம - பநி பநி / ப நிஸ்ஸ்நி ப மப /நிநிபம - ரிம ரி ஸ ||
வ.ரு.... வா.. . .ய் அன் .. பே . . . . ஆ . . று .மு. க. னே .

**அனுபல்லவி**

நீ பா நீ ; பமபநி ப ம பா / மப நி மபமரிஸ / ரிமபநி ஸ்ா; ||
பெரு க ா . . . . . . த லா . லே. . . . வா.டி . னேன்

ப நிஸ்ரி ம்ரி ஸ்ரிஸ் நிஸ்நி-பமபநி /ஸ்ரீஸ் நிஸ்நி- பநி / பமபம -ரிமரிஸ ||
பே . . . ர. ரு. . . . .. ளா. . ளா. . . . . அ. மு... கா. .

**முக்தாயிஸ்வரம்**

ரீபம - ரீமரி - ஸாரிஸ - நிபஸநி /ஸா ; ஸ்ா நிநி / பப மம ரிரி ஸஸ //
ரிபப ரிமம - ஸரிமபநி -மபநிஸ்ரி/ ம்ரீம்ரிஸ் ரிஸ்/ நிபம ரிபமரிஸ//
(முருகா)

## வர்ணம்

இராகம் :- ஆரபி
தாளம் :- ஆதி
இயற்றியவர் :- பாபநாசம் சிவன்

ஆ: ஸரிமபதஸ் } 29 இன்
அவ: ஸ்நிதபமகரிஸ } ஜன்னியம்

### பல்லவி

$1_4$ 0 0

ஸ்ா ; தரீஸ்நி தபமக ரிஸநித |ஸ தா ரிஸா மரி | , பம தபா த ரீ ||
ஸ்வா மி ... உன் ... னை... |ஸ தா நினைந் திராப்| பகல் வருந் துமென் ||
ஸ்ரீம் ஸ்ரீஸ் தரீஸ்ரீ தஸ்பதமப | தஸ்ா தபா மரி | , ஸதாரிஸரீ ||
சஞ்.. சலம் தீ .. ர அருள்தரதா |ம தம் த காதய்யா | தயாநிதியே ||

### அனுபல்லவி

தா ; தஸ்த பதபம கரிஸரீ |மகரிமபத பம | பதஸ்த ஸ்ா ;||
தா மோ .. த.. ர னே |ரா.. தா.. ர | ம ....ணா ||
தஸ்ாரீம்க்ரீ தஸ்ரீ தஸ்பத |ரீ, ஸ் நி த தா | , பமகரிமபத ||
தஞ் .சம்.. வேறி ன் றி .. |நெஞ் சம் .. நொந் | தலையுமே ..ழை ||

### முக்தாயிஸ்வரம்

ஸ்நிதரீஸ்நிதப மபபம மகரீ |ஸரிஸதா ரிஸரி | ஸரிமப தா; ||
பமாகரி பமதப ஸ்தரிஸ் ரீம்க் |ரிஸ்நித பததம | பபரிம மதபத ||

## வரணம

ாகம் :- ஆரபி
ாம் :- ஆதி
ற்றியவர் :- டைகர் வரதாச்சாரியார்.

ஆ: ஸரிமபதஸ் } 29 இன்
அவ: ஸ்நிதபமகரிஸ } ஜன்னியம்

## பல்லவி

$1_4$ 0 0

பா மா பா; பமப மாகரிரி /ரிரிமக ரிரிஸஸ / ஸ நி த ரீ ஸ ரி ம//
அன் ன மே. அ.. ர . . . வா. . .ப . . . ர . . ண னை . .

பமப மகரி தபத பமப ஸ்நிதத/ ரிஸ்ரிஸா நிதத / பாமக ரிஸரிம//
அ . . ழைத்து .. . . . வா ... வே . .க . . . ம . . தா. .ய்

## அனுபல்லவி

ஸநிததப பமப தஸ்தப மகரிரி | ஸரிமக ரிபமப | ஸ்நிதரிரீ ; //
பொன்னம் ப .. ல . .த் தே... கா... .ளி ... யு . . . டன்

ஸ்நித ரிரிஸ் ம்க்ரி ஸ்ாரி ஸ்நிதத/ தரிரி தஸ்ஸ் மப/தஸ்தப மகரிம//
ந . . ட . . மி. . டும். சி. வ. கா.. . . . மி . நே.. ச .னை.

## முத்தாயிஸ்வரம்

பாதம பத ரிமபத தபமகரிரி / ஸாரிஸ நித ஸரி/ மபமக ரிஸ நித//
ரிஸரிரீ மகரிரி பாம தபமப /தபமப மகரிரி /மகரிமபா ; //

பாதப மகரிஸநித ரிஸ ரி பமப / தாப ரிமபதத / ரிஸ்நித ரிஸ்ரீ//
ஸ்நித ரீ ம்பதஸ்ரீ ம்க்ரிஸ்ரி / தரிதஸ்ா பதம / பா மகரிஸரிம //

**வினா 7 இற்கான குறிக்கோள்**

35 தாளம் உருவாகும் முறையை விளக்கி, சப்த தாளங்களில் துருவ தாளம், ஜம்பை தாளம், ரூபக தாளம் என்பன ஜாதி பேதமடையும் முறையினை அட்டவணைப்படுத்துவார்.

அல்லது

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்வார்.

**7.** (i) சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகும் முறையினை விளக்குக.

(ii) சப்த தாளங்களில் துருவதாளம், ஜம்பைதாளம், ரூபகதாளம் என்பன ஜாதிபேதமடையும் முறையினை அட்டவணைப்படுத்துக.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசைவரலாற்றில் 14ஆம் 15ஆம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

i. ஸப்த தாளங்களான துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம், ஆகிய ஒவ்வொன்றும் லகுவின் 5 ஜாதிகளான திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகியவற்றுடன் பேதமடைந்து (7 × 5) 35 தாளங்கள் உருவாகின்றன.

இவ்வாறு எழுதியிருப்பின் (03 புள்ளிகள்)

ii.

| துருவ தாளம் | அங்கம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| திஸ்ர ஜாதி துருவ தாளம் | $l_3\ 0\ l_3\ l_3$ | 11 |
| சதுஸ்ரஜாதி துருவ தாளம் | $l_4\ 0\ l_4\ l_4$ | 14 |
| கண்ட ஜாதி துருவ தாளம் | $l_5\ 0\ l_5\ l_5$ | 17 |
| மிஸ்ர ஜாதி துருவ தாளம் | $l_7\ 0\ l_7\ l_7$ | 23 |
| சங்கீர்ண ஜாதி துருவ தாளம் | $l_9\ 0\ l_9\ l_9$ | 29 |

| ஜம்பை தாளம் | அங்கம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| திஸ்ர ஜாதி ஜம்பைதாளம் | $l_3$ u o | 6 |
| சதுஸ்ரஜாதி ஜம்பைதாளம் | $l_4$ u o | 7 |
| கண்ட ஜாதி ஜம்பைதாளம் | $l_5$ u o | 8 |
| மிஸ்ர ஜாதி ஜம்பைதாளம் | $l_7$ u o | 10 |
| சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம் | $l_9$ u o | 12 |

| த்ருவ தாளம் | அங்கம் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| திஸ்ர ஜாதி ரூபக தாளம் | $0\, l_3$ | 5 |
| சதுஸ்ரஜாதி ரூபக தாளம் | $0\, l_4$ | 6 |
| கண்ட ஜாதி ரூபக தாளம் | $0\, l_5$ | 7 |
| மிஸ்ர ஜாதி ரூபக தாளம் | $0\, l_7$ | 9 |
| சங்கீர்ண ஜாதி ரூபக தாளம் | $0\, l_9$ | 11 |

அட்டவணை ஒழுங்காக எழுதியிருப்பின் (03 + 03 + 03 = 09 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் 3 + 9 = 12 புள்ளிகள்

**அல்லது**

- 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலரால் "சங்கீத சுதாகரம்" என்னும் நூல் எழுதப்பட்டது.
- ஹரிபாலரின் சங்கீத சுதாகரம் என்னும் நூலிலேயே முதன் முதலில் இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகளான கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.
- 14 ஆம் நூற்றாண்டில் பாரசீகசம், அரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்தமையால் வட இந்திய சங்கீத முறையானது இந்துஸ்தானிய சங்கீதம் என மாற்றம் பெற்றது.
- கி.பி 15 ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் .சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20, 000 கீர்த்தனைகளும், வேறும்பல சம்பிரதாய கீர்த்தனைகளும் இயற்றி பஜனைப் பத்ததிக்கு வழிவகுத்தனர்.
- தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் அத்யாத்ம சங்கீர்த்தனங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் காணப்பட்டன.
- தாளப்பாக்கம் சின்னையா, புரந்தரதாசர் ஆகியோரின் கிருதிகளில் முதன் முதலில் அனுபல்லவி எனும் அங்கம் சேர்க்கப்பட்டது.
- முன்னைய பிரபந்தங்களில் உத்க்ரஹம், த்ருவம், மேளபாகம் ஆபோகம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களே பின்னர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களாக காணப்பட்டது.
- அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்து தமிழ்மொழியில் ஆயிரங்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார்.
- திருப்புகழ் பாடல்கள், சந்தக்கனிவும், ஓசைச் சிறப்பும் அமையப் பெற்ற உறுதியளிக்கும் தன்மை வாய்ந்ததாக இருந்தமையால் வாக்கிற்கு அருணகிரி என சிறப்பிக்கப்பட்டார்.
- 35 தாளங்கள், 108 தாளங்கள், 175 தாளங்கள் ஆகிய தாளங்களைக் கொண்டு சந்தச் சிறப்புடன் பாடல்களை ஆக்கியமையால் அருணகிரிநாதர் "சந்தப்பாவலர் பெருமான்" எனப் போற்றப்பட்டார்.
- ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கும் முன்பாக சந்த நடையும், தாள நடையும் குறிப்பிடப்பட்டமையால் பல தாளங்கள் அழிந்து போகாமல் இன்றும் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் 1 விடயத்துக்கு 1 புள்ளி வீத.ம் 12 விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின்

மொத்தப் புள்ளிகள் 3 + 9 = 12 புள்ளிகள்

# 10 සහ 11 ශ්‍රේණි සඳහා ග්‍රන්ථ නාමාවලිය

## (අ.පො.ස) සාමාන්‍ය පෙළ
## 11 ශ්‍රේණිය - කෙටි සටහන්

**සිංහල මාධ්‍ය**

- 10-11 සිංහල ව්‍යාකරණ
- 10-11 සිංහල සාහිත්‍යය රසාස්වාදය
- බුද්ධ ධර්මය
- කතෝලික ධර්මය
- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- English Language
- ගණිතය - 1
- ගණිතය - 2
- ජීව විද්‍යාව
- භෞතික විද්‍යාව
- රසායන විද්‍යාව
- ඉතිහාසය
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- භූගෝල විද්‍යාව
- පුරවැසි අධ්‍යාපනය
- පෙරදිග සංගීතය
- නර්තනය
- නාට්‍ය හා රංග කලාව
- චිත්‍ර කලාව
- තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය
- සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
- සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
- කෘෂි හා ආහාර තාක්ෂණය
- ගෘහ ආර්ථික විද්‍යාව

## 11 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

**සිංහල මාධ්‍ය**

- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- බුද්ධ ධර්මය
- ඉතිහාසය
- ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
- පුරවැසි අධ්‍යාපනය

## Grade 11 - Short Notes

**English Medium**

- Buddhism
- Mathematics - 1
- Mathematics - 2
- Biology
- Physics
- Chemistry
- History
- Business & Accounting Studies
- Geography
- Civic Education
- ICT
- Health & Physical Education
- 10-11 English Literary (Poetry)
- 10-11 English Literary (Drama)
- 10-11 English Literary (Short Story)

## Grade 11 - Model Papers

**English Medium**

- Civic Education

## 10 ශ්‍රේණිය - කෙටි සටහන්

**සිංහල මාධ්‍ය**

- බුද්ධ ධර්මය
- කතෝලික ධර්මය
- සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- සිංහල සාහිත්‍යය සංග්‍රහය
- සිංහල රචනා අත්වැල
- English Language
- ගණිතය - 1
- ගණිතය - 2
- ජීව විද්‍යාව
- භෞතික විද්‍යාව
- රසායන විද්‍යාව

# Grade 10 - Short Notes

**English Medium**

- [ ] Buddhism
- [ ] Mathematics - 1
- [ ] Mathematics - 2
- [ ] Biology
- [ ] Physics
- [ ] Chemistry
- [ ] History
- [ ] Business & Accounting Studies - 1
- [ ] Business & Accounting Studies - 2
- [ ] Geography
- [ ] Civic Education
- [ ] ICT
- [ ] Health & Physical Education

- [ ] ඉතිහාසය
- [ ] ඉතිහාසය රූප සටහන් අශ්‍රිත කෙටි සටහන්
- [ ] ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 1
- [ ] ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - 2
- [ ] භූගෝල විද්‍යාව
- [ ] පුරවැසි අධ්‍යාපනය
- [ ] පෙරදිග සංගීතය
- [ ] නර්තනය
- [ ] නාට්‍ය හා රංග කලාව
- [ ] චිත්‍ර කලාව
- [ ] තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය
- [ ] සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය
- [ ] සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය
- [ ] කෘෂි හා ආහාර තාක්ෂණය
- [ ] ගෘහ ආර්ථික විද්‍යාව
- [ ] ජපන් භාෂාව

# 10 ශ්‍රේණිය - ප්‍රශ්නෝත්තර

**සිංහල මාධ්‍ය**

- [ ] සිංහල භාෂාව හා සාහිත්‍යය
- [ ] බුද්ධ ධර්මය
- [ ] ගණිතය
- [ ] විද්‍යාව
- [ ] ඉතිහාසය
- [ ] පුරවැසි අධ්‍යාපනය
- [ ] භූගෝල විද්‍යාව
- [ ] පෙරදිග සංගීතය

# පාඩමෙන් පාඩමට මාසික ඇගයීම්

**සිංහල මාධ්‍ය**

- [ ] 10-ශ්‍රේණිය - විද්‍යාව
- [ ] 11-ශ්‍රේණිය - විද්‍යාව

# Grade 10 - Model Papers

**English Medium**

- [ ] Mathematics
- [ ] Science
- [ ] Civic Education
- [ ] Geography
- [ ] English Activity Book
- [ ] English Work Book

# අනෙකුත් ග්‍රන්ථ

- [ ] හෙළදිව කතිකාවත - අරුණශාන්ත අමරසිංහ
- [ ] හොල්මන් අවතාර සහ යකදුරන් - අරුණශාන්ත අමරසිංහ
- [ ] සිසු-ගුරු අත්පොත නාට්‍ය හා රංග කලාව 10-11 ශ්‍රේණි සඳහා (නව විෂය නිර්දේශය) - නන්දන අල්ගේවත්ත

සියලු ම ශ්‍රේණි සඳහා කෙටි සටහන්, ප්‍රශ්න පත්‍ර කට්ටල සහ වැඩ පොත් අප සතුව තිබෙන අතර, මෙම ඕනෑම ග්‍රන්ථයක් වට්ටම් සහිත ව ඔබේ නිවසට ම ගෙන්වා ගත හැකි ය.